# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள்.03.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16885/H/2024**

திரு.ம.வடிவேல் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்-620001. — பொது அதிகார அமைப்பு

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 04.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை அறிவிப்பு எண்.ந.க.ஆ6/38458/2022, நாள்.22.12.2022 தேதியிடப்பட்ட விசாரணை அறிவிப்பு தனக்கு அனுப்பப்பட்டதா உள்ளிட்ட 7 இனங்களுக்கான தகவல் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது (03.07.2026) இன்று காணொலி காட்சி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| **மேல்முறையீட்டாளர்** | **திரு.ம.வடிவேல்** அவர்கள் இன்றைய விசாரணைக்கு காணொலி காட்சி வாயிலாக ஆஜரானார். |
| **பொதுத் தகவல் அலுவலர்** | பொதுத் தகவல் அலுவலர் **திரு.கு.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர், திருச்சிராப்பள்ளி** அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## <u>ஆணை</u>

இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் 11.03.2025, 22.05.2025, 14.11.2025 மற்றும் 01.07.2025 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு தகவல் வழங்கியதாக ஆணையத்திடம் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**மனுதாரருக்கு ஏற்கனவே உண்மை நகல் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொது தகவல் அலுவலர், மனுதாரருக்கு மீண்டும் உண்மை நகலினை வழங்குவதாக அளித்த உத்தரவாதத்தின் அடிப்படையில், இந்த வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16885/H/2024</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்-620001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ம.வடிவேல்,
எண்.12, செக்கடி தெரு,
தாராநல்லூர்,
திருச்சிராப்பள்ளி-620008.
தொலைபேசி - 9345157916.

Copy to: file.
GP/PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005